# அராலி முதல் பொன்னாலை வரையான கரையோரம் வனவளப் பாதுகாப்பு திணைக்களத்திற்கு ஒதுக்கீடு!

## வடமாகாண சபை முன்னாள் உறுப்பினர் சபா.குகதாஸ்




யாழ்ப்பாண மாவட்டத்தில் சங்கானைப் பிரதேச செயலாளர் பிரிவை மையமாக கொண்டு அராலி முதல் பொன்னாலை வரையான கரையோரப் பகுதியை வனவளப் பாதுகாப்பு திணைக்களத்தின் வளப்பிரதேசமாக ஒதுக்கீடு செய்ய முன்மொழியப்பட்டுள்ளதாக யாழ்ப்பாண மாவட்ட செயலாளரால் சங்கானை பிரதேச செயலாளருக்கு கடிதம் அனுப்பி வைக்கப் பட்டுள்ளதாக யாழ் ஊடக அமையத்தில் இன்று இடம் பெற்ற ஊடகச் சந்திப்பில் வடக்கு மாகாண சபை முன்னாள் உறுப்பினர் சபா.குகதாஸ் தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில், அராலி முதல் பொன்னாலை வரையான கரையோரப் பகுதி பொது அமைப்புகளிடம் பிரதேச செயலாளரால் இது தொடர்பில் கலந்துரையாடல் நடைபெற்றுள்ளது. கலந்துரையாடலில் பங்கேற்றவர்கள் குறித்த விடயத்தை எமது கவனத்திற்கு கொண்டு வந்துள்ளனர்.

குறித்த பகுதி மக்கள் அராலி முதல் பொன்னாலை வரையான கரையோரப் பகுதியை வனவளப் பாதுகாப்பு திணைக்களத்தின் வளப்பிரதேசமாக ஒதுக்கீடு செய்வதை முற்றிலும் நிராகரித்திருக்கிறார்கள்.

கரையோரப் பகுதி மக்களின் வாழ்வாதரமே கடற்கரையை நம்பியே காணப்படுகின்றது. மாட்டுவண்டி சவாரித்திடல், சுடுகாடுகள், விவசாய நிலங்கள் காணப்படுகின்றன. ஆகவே, வன வளப் பாதுகாப்புத் திணைக்களத்தின் முன்மொழிவை முற்றிலும் நிராகரிக்கிறோம்.

குறித்த பகுதியை வன வளப் பாதுகாப்புத் திணைக்களத்திற்கு வழங்கினால் விகாரைகள், சிங்கள குடியேற்றம் போன்றவை வரவும் வாய்ப்பு உள்ளது என அப்பகுதி மக்கள் சந்தேகிக்கின்றனர்.

யாழ்ப்பாண மாவட்டச் செயலாளர் குறித்த முன்மொழிவை நிராகரித்து வன வளப் பாதுகாப்புத் திணைக்களத்திற்கு கடிதம் அனுப்ப வேண்டும். இல்லையேல் இதற்கு எதிராகப் போராட்டம் நடத்துவோம், என்றார். (01)


# மாலைக்கதிர்
Maalaikkathir

சாயல் 01 வள்ளுவர் ஆண்டு 2054 கார்த்திகை 13 புதன்கிழமை 29.11.2023 கதிர் 123



யாழ்ப்பாணத்தில் இருந்து ஒரு புதிய வியாபாரக்குறி!
A new brand from Jaffna!
பூ ஆடை
Poo Aadai
ஆண், பெண் இருபாலாருக்குமான ஆடைகள்


## மனிதப் புதைகுழி அகழ்வுப் பணி இரண்டாம் கட்டம் இன்று நிறைவு!



முல்லைத்தீவு மாவட்டத்தின் கொக்குத்தொடுவாய் பகுதியில் கண்டுபிடிக்கப்பட்ட மனித புதைகுழி அகழ்வின் இரண்டாம் கட்டப் பணிகள் இன்றுடன் நிறைவு பெறவிருப்பதாகத் தெரிவிக்கப் படுகிறது.

ஏற்கனவே முதலாம் கட்டத்தில் 17 உடற்பாகங்கள் கண்டெடுக்கப்பட்டிருந்தன. இந்த நிலையில், இரண்டாம் கட்டம் 20 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டு நேற்று வரை 39 மனித உடற்பாகங்கள் மீட்கப்பட்டுள்ளன.

இந்த மனிதப் புதைகுழி எவ்வளவு தூரத்துக்குப் பரந்துள்ளது என்பது தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட விசேட ஸ்கான் பரிசோதனை மூலம், அது - கொக்கிளாய் - முல்லைத்தீவு பிரதான வீதி ப்பக்கமாக ஏற்கனவே அகழ்வுக்காகத் தோண்டப்பட்ட இடத்திலிருந்து மேலதிகமாக 1.7 மீற்றர்

2

## யுத்தத்தால் இடம்பெயர்ந்த அனைவரும் 3 வருடத்துக்குள் மீள் குடியேற்றப்படுவர்

### அமைச்சர் பிரசன்ன ரணதுங்க



வடக்கு - கிழக்கிலிருந்து யுத்தம் காரணமாக இடம்பெயர்ந்த அனைவரையும் அடுத்த 3 வருடங்களுக்குள் மீள்குடியமர்த்த அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளதாக அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றில் இன்று உரையாற்றிய அவர், 2027 ஆம் ஆண்டுக்குள் கண்ணிவெடிகள் அற்ற நாடாக இலங்கையை மாற்ற விசேட வேலைத்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் குறிப்பிட்டார்.

யுத்தம் நிறைவுக்கு கொண்டுவரப்பட்ட பின்னர், வடக்கையும் கிழக்கையும் அபிவிருத்தி செய்ய பல வேலைத்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டன. அப்பகுதி மக்களை எந்தவகையிலும் பாதிக்காத வகையில் இந்த செயற்பாடுகளை நாம் கடந்த காலங்களில் மேற்கொண்டிருந்தோம்.

யுத்தம் காரணமாக அகதிகளாக இடம்பெயர்ந்தவர்களை சொந்தப் பகுதிகளில் குடியமர்த்த தற்போதும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

இதற்காக 147,848 வீடுகளை அரசாங்கம் பல்வேறு தரப்பினரின் உதவியுடனும் நிர்மாணிக்க நடவடிக்கை எடுத்துள்ளது. இந்த வருட ஆரம்பத்தில் 1700 வீட்டுத் தொகுதிகளில் நிர்மாணப் பணிகள் பூரணமாகியிருக்கவில்லை. அதேவேளை, மேலும் 1665 வீடுகளை நிர்மாணிக்க நாம் நடவடிக்கை எடுத்தோம். 150 மில்லியன் ரூபா நிதி இதற்காக ஒதுக்கப்பட்டது.

2

## பதில் பொலிஸ் மா அதிபராக தேசபந்து தென்னகோன்



பதில் பொலிஸ் மா அதிபராக சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னகோன் நியமிக்கப் பட்டுள்ளார்.

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவினால் குறித்த நியமனம் இன்று வழங்கப்பட்டுள்ளது.

பொலிஸ்மா அதிபராக இருந்த சி.டி விக்ரமரத்ன எதிர்வரும் 25ஆம் திகதி தனது பதவியில் இருந்து ஓய்வு பெறவுள்ளதாக அறிவித்துள்ளார்.

சி.டி விக்ரமரத்னவிற்கு மூன்று மாதங்களுக்கு வழங்கப்பட்ட சேவை நீடிப்பு காலம்

2

## பதுக்கல் பொருட்களைத் தேடுகின்ற அதிகாரிகளுக்கு பொலிஸ் பாதுகாப்பு

கொழும்பு, நவ. 29

பானையாளர்களுக்கு தேவையான சீனி மற்றும் அரிசியை சந்தைக்கு விடுவிக்காமல் பதுக்கி வைக்கும் கடைகளைச் சுற்றிவளைக்கச் செல்லும் நுகர்வோர் விவகார அதிகார சபையின் அதிகாரிகளுக்கு விசேட அதிரடிப்படையினர் மற்றும் பொலிஸாரின் பாதுகாப்பை வழங்குமாறு பொலிஸ் மா அதிபரிடம் கோரியுள்ளதாக நுகர்வோர் விவகார அதிகாரசபையின் சுற்றிவளைப்புச் சோதனைப் பிரிவின் தலைவரான ஓய்வுபெற்ற சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் சஞ்சய் வீரசிங்க தெரிவித்தார்.

மேலும், பொருட்களை பதுக்கி வைக்கப்பட்டுள்ள இடங்கள் குறித்து 1977என்ற இலக்கத்திற்கு அறிவிக்குமாறும் அவர் பொதுமக்களை கேட்டுக் கொண்டுள்ளார்.

அதற்கமைய, பாரிய அளவிலான சோதனைகளின் போது விசேட அதிரடிப் படையினரின் பாதுகாப்பினையும், பிரதான நகரங்களுக்கு வெளியே மேற்கொள்கின்ற சோதனை நடவடிக்கைகளின்போது பொலிஸ் பாதுகாப்பினையும் அதிகாரிகளுக்கு வழங்குவதற்கு தேவையான ஏற்பாடுகளை செய்யுமாறு பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிகளை பணிக்குமாறு பொலிஸ் மா அதிபரிடம் வர்த்தகத்துறை அமைச்சர் நளின் பெர்னாண்டோ கடிதம் மூலம் கோரியுள்ளார் எனவும் வீரசிங்ஹ மேலும் தெரிவித்தார்.

நுகர்வோர் அதிகாரசபை அதிகாரிகள் சோதனை நடவடிக்கைகளுக்குச் செல்லும்போது பல்வேறு சிரமங்களை எதிர்கொள்வதாகவும், அவ்வாறான நிலைமைகள் ஏற்படாதவாறு அதிகாரிகளுக்கு பொலிஸ் பாதுகாப்பு வழங்க வேண்டியது அவசியம் எனவும் அக்கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டினார். (ரெந-48)

## நாடு திரும்பினார் போதகர் ஜெரோம்!

போதகர் ஜெரோம் பெர்னாண்டோ இன்று அதிகாலை கட்டுநாயக்க பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தினூக இலங்கையை வந்தடைந்ததாக குடிவரவு குடியகல்வுத் திணைக்களத்தின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

போதகர் ஜெரோம் பெர்னாண்டோ கட்டார் எயார் லைன்ஸில் சிங்கப்பூரில் இருந்து இலங்கைக்கு திரும்பியதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

அத்தோடு, நீதிமன்றம் வழங்கிய உத்தரவின் அடிப்படையில் அவர் 48 மணித்தியாலங்களுக்குள் குற்றப் புலனாய்வுப் பிரிவினரிடம் வாக்குமூலம் வழங்க உள்ளார் என்றும் கூறப்படுகிறது.

- பக்கம் சாராச் செய்திகளுடன் மக்களுக்கான மாலை இதழ் -

# அட்டாளைச்சேனை சிறு தொழில் முயற்சி உற்பத்திகள் கண்காட்சியும் விற்பனையும்



(எம்.எப்.நவாஸ்)

அட்டாளைச்சேனை பிரதேச செயலகத்துடன் இணைந்து சிறு தொழில் முயற்சி அபிவிருத்தி பிரிவு ஏற்பாடு செய்த உள்ளூர் உற்பத்திப் பொருட்களுக்கான விற்பனை மற்றும் கண்காட்சி நிகழ்வானது நேற்று

பிரதேச செயலாளர் எம்.ஏ.சி.அகமது ஷாபிர் தலைமையில் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி பிரிவு உத்தியோகத்தர்களின் ஒழுங்கமைப்பில் பிரதேச செயலக வளாகத்தில் இடம்பெற்றது. இந்த விற்பனை மற்றும் கண்காட்சி நிகழ்வின்போது பிரதேச செயலக பிரிவின் உள்ளூர் உற்பத்தியாளர்களால் உற்பத்தி செய்யப்பட்ட பொருட்கள் காட்சிப்படுத்தப்பட்டிருந்தன.

இந்நிகழ்வில் கணக்காளர், உதவி திட்டப் பணிப்பாளர், நிருவாக உத்தியோகத்தர், சமுர்த்தி முகாமையாளர்கள், ஏனைய உத்தியோகத்தர்கள் மற்றும் பொது மக்களும் கலந்து கொண்டு பொருட்களை கொள்வனவு செய்தனர்.

# சாய்ந்தமருது நூலகத்திற்கு புத்தகங்கள் அன்பளிப்பு

(ஏ.எஸ்.மௌலானா)

கட்டார் நாட்டில் பணியாற்றும் சாய்ந்தமருதைச் சேர்ந்த பொறியியலாளர் எச்.எம். பர்ஸாத், க.பொ.த. சாதாரண தர மற்றும் உயர்தர வகுப்பு மாணவர்களின் நலன்கருதி சாய்ந்தமருது பொது நூலகத்திற்கு ஒரு தொகுதி நூல்களை அன்பளிப்புச் செய்துள்ளார்.

இவற்றை செவ்வாய்க்கிழமை (28) பிற்பகல் அவரது சார்பில் எம். சித்தி நிபாரா, கல்முனை மாநகர ஆணையாளர் ஏ.எல்.எம். அஸ்மியிடம் சம்பிரதாயபூர்வமாக கையளித்தார்.

இந்நிகழ்வில் மாநகர சபையின் உதவி ஆணையாளர் ஏ.எஸ்.எம். அஸீம், பொறியியலாளர் ஏ.ஜே.எச். ஜௌஸி, கணக்காளர் கே.எம்.றியாஸ் ஆகியோரும் பங்கேற்றிருந்தனர்.



தூரநோக்கு சிந்தனையுடன் மாணவர் நலன் கருதி மிகவும் பெறுமதியான நூல்களை அன்பளிப்புச் செய்தமைக்காக பொறியியலாளர் எச்.எம். பர்ஸாதிற்கு மாநகர சபை சார்பில் மிகுந்த நன்றியும் வாழ்த்தும் தெரிவிப்பதாகக் கூறிய ஆணையாளர், பாராட்டுப் பத்திரம் ஒன்றையும் வழங்கி வைத்தார்.

# உரும்பிராய் காளி கோவிலில் ஐம்பொன் அம்மன் சிலை திருட்டு!

கோப்பாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட உரும்பிராய் காளி கோவிலில் நேற்று இரவு திருட்டுச் சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது.

குறித்த ஆலய கர்ப்பக்கிரகத்தினுள் இருந்த 4 இலட்சம் ரூபா பெறுமதியான ஐம்பொன்னிலான அம்மன் சிலை, அம்மன் தாலி, அம்மனின் தோடு உள்ளிட்ட ஒன்றரைப் பவுண் நகைகளும் திருடப்பட்டுள்ளதோடு, ஆலய வளாகத்தில் இருந்த உண்டியல் உடைக்கப்பட்டு ஒரு தொகைப் பணமும் திருடர்களால் அபகரித்துச் செல்லப்பட்டுள்ளது

குறித்த திருட்டுச் சம்பவம் தொடர்பில் ஆலயப் பூசகரால் கோப்பாய்ப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது

இன்று காலை 7 மணி அளவில் ஆலயப் பூசகர் ஆலயத்திற்குச்சென்று பூசை வழிபாடுகளை மேற்கொள்ள முற்பட்டபோதே குறித்த திருட்டு இடம்பெற்றுள்ளமை தெரிய வந்ததாக ஆலயப் பூசகர் பொலிசாரிடம் வழங்கிய முறைப்பாட்டில் தெரிவித்துள்ளார். (01)

## பதில் பொலிஸ் மா அதிபராக .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முடிவடைந்த பின்னர், ஜூலை 9 முதல் அமுலுக்கு வரும் வகையில் மேலும் 3 மாதங்களுக்கு அது நீடிக்கப்பட்டது.

மூன்றாவது முறையாக மேலும் 3 வார சேவை நீட்டிப்பு ஒக்டோபர் 13 அன்று வழங்கப்பட்டது. இந்த நிலையில் நான்காவது முறையாக நவம்பர் மாதம் 3 ஆம் திகதி முதல் 24 ஆம் திகதி வரை மீண்டும் சேவை நீடிப்பு வழங்கப்பட்டது.

சி.டி விக்ரமரத்னவின் சேவை நீடிப்புக்கு அரசியலமைப்புப் பேரவை அங்கீகாரம் வழங்கத் தவறிய பின்னணியில், இத்தகைய சேவை நீடிப்பு ஜனாதிபதியால் வழங்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## மனிதப் புதைகுழி அகழ்வுப் பணி ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வரை செல்வதாகவும், 3 மீற்றர் அகலமாக இருப்பதாகவும் அறியப்பட்டது.

ஏற்கனவே அகழப்பட்ட குழியில் இருக்கின்ற உடற்பாகங்களை அகழ்தெடுக்கும் நடவடிக்கை இன்றுடன் நிறைவு பெறுகின்ற நிலையில், இன்றுடன் இரண்டாம் கட்ட அகழ்வு நடவடிக்கை நிறைவுறுத்தப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

மூன்றாம் கட்ட அகழ்வுப் பணியானது மார்ச் மாதம் முதலாம் திகதி ஆரம்பிக்கப்பட்டு ஒரு மாதகாலத்துக்கு மேற்கொள்ளத் தீர்மானிக்கப்பட்டிருக்கின்றது.

இது தொடர்பான மேலதிக விடயங்களைக் கலந்தாலோசித்து முடிவெடுப்பதற்காக இம்மாதம் 14 ஆம் திகதிக்கு இது தொடர்பான வழக்கு தவணையிடப்பட்டுள்ளது. (04)

## யுத்தத்தால் இடம்பெயர்ந்த .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உட்கட்டமைப்பு வசதிகளுக்காக 500 மில்லியன் ரூபா வரவு செலவுத் திட்டத்தில் ஒதுக்கப்பட்டது.

3 வருடங்களுக்குள் வடக்கு - கிழக்கிலிருந்து இடம்பெயர்ந்த அனைவரையும் குடியமர்த்த முடியும் என நாம் உறுதியாக நம்புகிறோம்.

2024 ஆம் ஆண்டிலிருந்து 2027 ஆம் ஆண்டுக்குள் கண்ணி வெடிகள் அற்ற நாடாக இதனை மாற்ற நாம் முயற்சிகளை எடுத்துள்ளோம். வடக்கு - கிழக்கில் 204 சதுர கிலோ மீற்றர் பரப்பளவில் கண்ணி வெடிகளை அகற்றி, அந்தக் காணிகளை மக்களிடத்தில் ஒப்படைத்துள்ளோம். இன்னும் 15 சதுர கிலோ மீற்றர் காணிகளில் நிலக்கண்ணி வெடிகளை அகற்ற வேண்டியுள்ளது. இதற்காக சர்வதேசத்தின் நிதியுதவிகள் எமக்கு கிடைத்துள்ளன, எனவும் அமைச்சர் பிரசன்ன ரணதுங்க குறிப்பிட்டார். (04)




## விற்பனையாளர் தேவை

**நிறுவனம்:** யாழ்முற்றம்
**பால்:** இருபாலரும்
**வேலை நேரம்:** காலை 7:00 மணி - மாலை 7 மணி வரை
**சம்பளம்:** பேசித் தீர்மானிக்கப்படும்
**தொடர்புகளுக்கு:** +94 77 307 8799

உங்கள் பிரதேசத்து நிகழ்வுகள் பற்றிய விபரங்களை எமக்கு அனுப்பிட
maalaikkathir@gmail.com

செய்திகளையும் இன்னும் பல காணொளிகளையும் பார்வையிட
காலைக்கதிர் TV YouTube தளம்

# ஒய்வுக்கு முன்னர் ஆயத்தமாதல் திருமலையில் விழிப்புணர்வு நிகழ்வு

(ஹஸ்பர்)

முதியோர்களுக்கான தேசிய நிதி ஒதுக்கீட்டின் கீழ் மாவட்ட செயலகத்தின் ஏற்பாட்டில், ஓய்வுக்கு முன்னர் ஆயத்தமாதல் - செயற்றிறனான முதுமைப்பருவம் - எனும் தொனிப்பொருளில் விழிப்புணர்வு நிகழ்ச்சி நேற்று திருகோணமலை மாவட்ட செயலக புதிய ஒன்றுகூடல் மண்டபத்தில் இடம்பெற்றது.

பட்டினமும் சூழலும், கிண்ணியா, மூதூர், தம்பலகாமம் போன்ற பிரதேச செயலகங்களை பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் 50-60 வயதுக்குட்பட்ட உத்தியோகத்தர்கள் இதில் கலந்து கொண்டனர்.



அரச ஊழியர்கள் ஏதாவதொரு நாள் ஓய்வு பெற வேண்டும். அவர்களின் ஓய்வு காலத்தை பாதுகாப்பாகவும் சுதந்திரமாகவும் கொண்டு செல்ல இன்றிலிருந்து திட்டமிட வேண்டும். அதற்காக ஆரோக்கியமாக இருக்க வேண்டுமென்றும், இந்த விழிப்புணர்வு நிகழ்ச்சியின் மூலம் பெற்ற அறிவை தமது ஓய்வு காலத்தை திட்டமிடுவதற்கு ஒரு தொடக்க புள்ளியாக பயன்படுத்த வேண்டுமென்றும் திருகோணமலை மாவட்ட அரசாங்க அதிபர் சாமிந்த ஹெட்டியாரச்சி இதன்போது உத்தியோகத்தர்களுக்கு ஆலோசனை வழங்கினார்.

இந்நிகழ்வில் திருகோணமலை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் ஜே.எஸ்.அருள்ராஜ், மாவட்ட செயலக நிர்வாக உத்தியோகத்தர் எஸ்.ஆர்.கே.எஸ்.குருகுலசூரிய, மாவட்ட முதியோர் உரிமைகள் மேம்பாட்டு உத்தியோகத்தர் எ.எல்.எம்.இர்பான், திருகோணமலை பல்கலைக்கழக சித்த மருத்துவ பீடாதிபதி டொக்டர் அனவர்தன், வைத்திய அத் தியட்சகர் டொக்டர். நிரஞ்சன், மருத்துவ உத்தியோகத்தர் டொக்டர்.திருமதி வைகலை, மருத்துவ உத்தியோகத்தர் டொக்டர்.மோகனசந்திரன், டொக்டர் திருமதி செனவிரத்ன மற்றும் பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

# கல்முனை கார்மேல் பற்றிமா கல்லூரியின் ஒளிவிழா!





(கல்முனைச் செய்தியாளர்)

கல்முனை கார்மேல் பற்றிமா கல்லூரியின் வருடாந்த ஒளிவிழா இன்று கல்லூரி அதிபர் அருட்சகோதரர் ச.இ.றெஜினோல்ட் தலைமையில் நடைபெற்றது.

நிகழ்வின் பிரதம அதிதியாக இந்தியா இலங்கை நாடுகளின் டி லாசலா சபையின் மாகாண விருந்தினர் அதிவண. அருட் சகோ. பேற்றம் பெரேரா கலந்து சிறப்பித்தார்.

விழாவில், கல்முனை பங்குத் தந்தை வண.பிதா.ஏ.தேவதாசன், கல்முனை சேகரம் மெதடிஸ்த தேவாலய முகாமைத்துவ குரு வண.எஸ்.ரவி. முருகுப்பிள்ளை, வைத்திய நிபுணர்களான டொக்டர் சி.ஆர்.றொஹான், டொக்டர் எஸ்.என்.றொசாந்த், பொறியியலாளர் ஹென்றி அமல்ராஜ் ஆகியோர் கலந்து சிறப்பித்தார்கள்.

ஒளிவிழாவில் மாணவர்களின் நிகழ்ச்சிகளும் மேடையேறின. ஒளிவிழாவை ஒட்டி கல்லூரியில் இடம்பெற்ற போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பரிசுகள் வழங்கப்பட்டன. அதிதிகளுக்கும் நத்தார் பரிசுகள் வழங்கப்பட்டன.

கல்வித் திணைக்களம் சார்பில் கோட்டக் கல்விப்பணிப்பாளர் ச.சரவணமுத்து, உதவிக்கல்விப் பணிப்பாளர் வி.ரி.சகாதேவராஜா, ஆசிரிய ஆலோசகர் திரு; மதி ரிகே. பத்திரண, ஓய்வு நிலை ஆசிரிய ஆலோசகர் திருமதி மெற்றில்டா பெர்ணான்டஸ் ஆகியோரும் கலந்து சிறப்பித்தனர்.

# சாதனைப்பெண் அகிலத்திருநாயகிக்கு யாழ்ப்பாணத்தில் கௌரவிப்பு நிகழ்வு



72 வயதில் இரண்டு தங்கப்பதக்கங்கள் வென்று சாதனை படைத்த முல்லைத்தீவைச் சேர்ந்த அகிலத்திருநாயகிக்கு இன்று யாழ்ப்பாணத்தில் கௌரவிப்பு இடம்பெற்றது.

யாழ்.சிறைச்சாலையின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இந்த நிகழ்வின் ஆரம்பத்தில், சாதனைப் பெண் யாழ்ப்பாணம் மாவட்ட செயலகத்தின் முன்பாக வைத்து யாழ் மாவட்ட அரசாங்க அதிபர் மற்றும் உத்தியோகத்தரால் கௌரவிக்கப்பட்டார்.

தொடர்ந்து மாவட்ட செயலகத்தின் முன்பாக இருந்து வாகன பேரணியில் சாதனைப்பெண் அகிலத்திருநாயகி யாழ்ப்பாணம் சிறைச்சாலைக்கு அழைத்து வரப்பட்டார்.

யாழ்ப்பாணம் சிறைச்சாலையில் வைத்து அவருக்கு நினைவுச் சின்னம் வழங்கி கௌரவிக்கப்பட்டது.

முல்லைத்தீவு - முள்ளியவளையைச் சேர்ந்த அகிலத்திருநாயகி அண்மையில் பிலிப்பைன்ஸில் நடைபெற்ற நஷனல் மாஸ்டர்ஸ் அன்ட் சீனியர்ஸ் அத்லடிக்ஸ் போட்டியில் இரண்டு தங்கப் பதக்கங்களைத் தனதாக்கியுள்ளார்.

1500 மீற்றர் ஓட்டப்போட்டி மற்றும், 5000 மீற்றர் விரைவு நடை ஆகிய போட்டிகளில் தங்கப் பதக்கங்களையும், 800 மீற்றர் ஓட்டபோட்டியில் வெண்கலப் பதக்கத்தையும் அவர் தனதாக்கியுள்ளார்.

72 வயதுடைய இவர் ஓய்வு பெற்ற சிறைச்சாலைகள் உத்தியோகத்தர் என்பது குறிப்பிடத்தக்கது. (01)

# புத்தளம் - கரைத்தீவு தேசிய பாடசாலையில் முதலாவது சுற்றாடல் குழு அங்குரார்ப்பணம்

(கற்பிட்டி - எம்.எச்.எம் சியாஜ்)

கல்வி அமைச்சும் மத்திய சுற்றாடல் அதிகார சபையும் இணைந்து "சுற்றாடல் எம்மை காக்கும் - நாம் சுற்றாடலை காப்போம்" என்ற எண்ணக் கருவின் அடிப்படையில் பாடசாலை மாணவர்கள் மத்தியில் நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் செயற்றிட்டம் வாயிலாக முதலாவது சுற்றாடல் முன்னோடிக் குழு புத்தளம் - கரைத்தீவு தேசிய பாடசாலையில் நேற்று ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

பாடசாலையின் அதிபர் ஏ.கே நயீமுல்லாஹ் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் புத்தளம் மாவட்ட சுற்றாடல் ஆலோசகர் ஏ.எச்.எம்.எம் ஷாபி, புத்தளம் வலய சுற்றாடல் ஆணையாளர் பாறூக் பதீன், புத்தளம் தெற்கு கோட்ட சுற்றாடல் ஆணையாளர் ஏ.ரங்கநாதன் ஆகியோர் கலந்து கொண்டனர். இதன் போது தரம் 6 க்குமேற்பட்ட மாணவ, மாணவிகளை உள்ளடக்கிய 25 மாணவர்கள் சுற்றாடல் முன்னோடிக் குழுவிற்கு தெரிவு செய்யப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.



# தென்னாபிரிக்கப் பிளாட்டினம் சுரங்கத்தில் மின்தூக்கி அறுந்து விழுந்து 11 பேர் மரணம்

தென்னாபிரிக்காவிலுள்ள பிளாட்டினம் சுரங்கத்தில் மின்தூக்கியின் (லிப்ட்) கம்பிக் கயிறு அறுந்து, அது 200 மீற்றர் உயரத்திலிருந்து விழுந்ததில் 11 தொழிலாளர்கள் உயிரிழந்து, 75 பேர் காயமடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அந்த நாட்டின் ரஸ்டன்பெர்க் நகரிலுள்ள தனியார் நிறுவனத்துக்குச் சொந்தமான அந்தச் சுரங்கத்தில் இந்த விபத்து நடந்த திங்கட்கிழமை இரவு நேரிட்டது.

இந்த விபத்தில் உயிரிழந்த மற்றும் காயமடைந்த 86 பேரும் மின்தூக்கியில் இருந்தவர்கள் என்று கூறப்படுகிறது.

பணிநேரம் முடிந்து தொழிலாளர் குழுவினர் மாறும் போது இந்த விபத்து ஏற்பட்டது என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.

சுரங்கத்தில் மின்தூக்கி அறுந்து விழுந்து ஏற்பட்டுள்ள இந்த விபத்து மிகவும் அபூர்வமானது என்று கூறப்படுகிறது. விபத்துக்கான காரணம் குறித்து விசாரணை தொடங்கியுள்ளது.

பிளாட்டினம் உற்பத்தியில் உலகில் முதலிடம் வகிக்கும் நாடு தென்னாபிரிக்கா என்பது குறிப்பிடத்தக்கது.



அந்த நாட்டின் பல்வேறு சுரங்கங்களில் அடிக்கடி விபத்துகள் ஏற்பட்டு அவற்றில் அதிக உயிர்ச் சேதம் ஏற்பட்டுவருவதாகக் குற்றச்சாட்டுகள் முன்வைக்கப் பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (04)

# மீட்கப்பட்ட 41 தொழிலாளர்களோடு தொலைபேசியில் உரையாடிய மோடி



உங்கள் துணிச்சல் பாராட்டுக்குரியது, என சுரங்கத்திலிருந்து மீட்கப்பட்ட 41 தொழிலாளர்களிடமும் தொலைபேசியில் இந்தியப் பிரதமர் நரேந்திரமோடி தெரிவித்துள்ளார்.

உங்கள் அனைவருக்கும் எனது வாழ்த்துகள். நீண்ட காத்திருப்புக்குப் பின்னர் மகிழ்ச்சியுடன் வெளிவந்துள்ளீர்கள். அதில் எனக்குப் பெருமகிழ்ச்சி. அதை விவரிக்க வார்த்தைகள் இல்லை. கேதார்நாத் பாபா, பத்ரிநாத் ஜியின் கருணையால் நீங்கள் அனைவரும் நலமாக இருக்கிறீர்கள். நீங்கள் அனைவரும் தைரியமாக இருந்து, மற்றவர்களையும் தைரியப்படுத்தியுள்ளீர்கள். இது மிகப்பெரிய விடயம். ஏனென்றால் நாம் ஒரு ரயிலில் பயணம் செய்யும்போதே சில மணி நேரங்களில் சில சமயம் உடன் பயணிப்பவர்களுடன் கருத்து வேறுபாடு ஏற்பட்டுவிடும். ஆயினும், இக்கட்டான சூழ்நிலையிலும் நீங்கள் மிகவும் பொறுமை காத்துள்ளீர்கள்.

நான் தொடர்ந்து மீட்புப் பணிகள் குறித்த தகவல்களைக் கேட்டும், மாநில முதல்வரிடம் தொடர்பிலும் இருந்தேன். பிரதமர் அலுவலக அதிகாரிகள் மீட்புப் பணிகள் குறித்த தகவல்களை எனக்கு தொடர்ந்து தெரிவித்தனர். மீட்பு நடவடிக்கைகள் காலதாமதமானபோது நான் மிகவும் கவலை அடைந்தேன். உங்களுடைய குடும்பத்தினர், நண்பர்களின் பிரார்த்தனைகளால் நீங்கள் இந்த சிக்கலை வென்றுள்ளீர்கள், என்று இந்தியப் பிரதமர் தெரிவித்தள்ளார்.

சில்க்யாரா சுரங்கத்துக்குள் இருந்து மீட்கப்பட்ட 41 தொழிலாளர்களுக்கும் மருத்துவப் பரிசோதனை சினியாலிசவுர் சமுதாய சுகாதார நிலையத்தில் வைத்து நடக்கிறது. அனைத்து தொழிலாளர்களும் சுகாதார நிலையத்தில் அனுமதிக்கப்பட்டு, மருத்துவர்களின் ஆலோசனைகளின் பெயரில் அவர்களுக்கு உணவுகள் வழங்கப்படுகின்றன என்று இந்திய அரசு வட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

17 நாட்களுக்குப் பின், சுரங்கத்தில் சிக்கியிருந்த 41 தொழிலாளர்களையும், இந்தியத் தேசிய பேரிடர் மீட்புக் குழுவினர் அவுஸ்திரேலிய நாட்டு நிபுணரின் உதவியோடு பத்திரமாக மீட்டு வெளியே கொண்டு வந்தனர். ஒருவர் பின் ஒருவராக சுரங்கத்தில் சிக்கியிருந்த 41 தொழிலாளர்களும் பத்திரமாக வெளியேற்றப்பட்டனர். முதலாவது நபர் வெளியே வந்தபோது, சுரங்கத்தின் வெளியே காத்திருந்த மீட்புப் பணியில் ஈடுபட்டிருந்த தொழிலாளர்கள், உறவினர்கள், பொதுமக்கள் என அனைவரும் கைகளைத் தட்டி தங்களது மகிழ்ச்சியை வெளிப்படுத்தினர். (04)

# தமிழ் வம்சாவளி அமைச்சர்கள் மீது அவதூறுக் கருத்து சிங்கப்பூர் பிரதமரின் சகோதர் இழப்பீடு தர உத்தரவு

சிங்கப்பூரில் தமிழ் வம்சாவளி அமைச்சர்கள் மீது சமூக ஊடகத்தில் அவதூறுக் கருத்துகளைத் தெரிவித்ததாகத் தொடரப்பட்ட வழக்கில், பிரதமர் லீ சியென் லூங்கின் இளைய சகோதரர் லீ சியென் யாங் இழப்பீடு வழங்க வேண்டுமென உயர்நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டுள்ளது.

தமிழ் வம்சாவளி அமைச்சர்களான சிங்கப்பூர் சட்ட மற்றும் உள்துறை அமைச்சரான கே.சண்முகம், வெளியுறவு அமைச்சர் விவியன் பாலகிருஷ்ணன் ஆகியோருக்கு சிங்கப்பூர் நில ஆணையத்திடமிருந்து இரு பங்களாக்களை வாடகைக்குப் பெறுவதில் முன்னுரிமை அளிக்கப்பட்டதாகவும், அதன்மூலம் இருவரும் ஆதாயம் பெற்றதாகவும் பேஸ்புக்கில் லீ சியென் யாங் கடந்த ஜூலை மாதம் கருத்துகளைப் பதிவிட்டிருந்தார். இவர் தற்போது பிரிட்டனில் வசித்து வருகிறார்.

இந்தக் குற்றச்சாட்டில் உண்மை இல்லை எனத் தெரிவித்து லீ சியென் யாங் மீது இரு அமைச்சர்களும் சிங்கப்பூர் உயர்நீதிமன்றத்தில் அவதூறு வழக்குத் தொடுத்தனர்.

இந்த வழக்கில் லீ சியென் யாங் பதில் மனுத் தாக்கல் செய்யாததையடுத்து, இரு அமைச்சர்களுக்கும் அவர் இழப்பீடு வழங்க வேண்டும் என உயர்நீதிமன்றம் உத்தரவிட்டது. இழப்பீட்டுத் தொகை எவ்வளவு என்பது அடுத்த விசாரணையின்போது தெரிவிக்கப்படும் எனவும் அறிவித்தது.

மேலும், இரு அமைச்சர்கள் மீதும் தொடர்ந்து தவறான, அவதூறான கருத்துகளை வெளியிடவும் லீ சியென் யாங்கிற்கு நீதிமன்றம் தடை விதித்துள்ளது. (04)

# உளவுக் குற்றச்சாட்டின் பேரில் ரஷ்யாவில் கைது செய்யப்பட்ட அமெரிக்கச் செய்தியாளரின் சிறைக்காவல் ஜனவரிக்கு நீடிப்பு



ரஷ்யாவில் உளவுக் குற்றச்சாட்டின் பேரில் கைது செய்யப்பட்டுள்ள அமெரிக்கச் செய்தியாளர் எவான் கெர்ஷ்கோவிச்சின் சிறைக் காவலை வரும் ஜனவரி மாதம் வரை நீடித்து அந்த நாட்டு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இது குறித்து நீதிமன்ற அலுவலகம் வெளியிட்டுள்ள அறிக்கையில், கெர்ஷ்கோவிச்சின் விசாரணைக் காவல் காலம் ஜனவரி 30 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ரஷ்யாவில் உளவு போன்ற பெரிய குற்றச்சாட்டுகளுக்குள்ளானவர்கள் விசாரணை முடியும் வரை பிணையில் விடுவிக்கப்படுவதில்லை என்பதால் கெர்ஷ்கோவிச்சின் சிறைக் காவல் நீட்டிக்கப்படும் என்று ஏற்கெனவே எதிர்பார்க்கப்பட்டது.

தங்கள் நாட்டில் உளவு பார்த்ததாகக் கூறி, அமெரிக்காவின் 'வோல் ஸ்ட்ரீட் ஜேர்னல்' பத்திரிகையின் செய்தியாளர் எவான் கெர்ஷ்கோவிச்சை ரஷ்யாவின் தேசியப் பாதுகாப்பு அமைப்பு (எப்எஸ்பி) கடந்த மார்ச் மாதம் கைது செய்தது.

அமெரிக்க அரசின் உத்தரவின்படி, ரஷ்ய ராணுவத் தொழிலகங்களின் செயல்பாடுகள் குறித்த விவரங்களை சேகரிக்கும் பணியில் கெர்ஷ்கோவிச் ஈடுபட்டிருந்தாகவும், அந்தத் தகவல்கள் ரஷ்ய சட்டத்தின்கீழ் பாதுகாக்கப்பட வேண்டிய ரகசியங்கள் எனவும் எப்எஸ்பி கூறியது.

எனினும், இந்தக் குற்றச்சாட்டுகளை கெர்ஷ்கோவிச்சும், அமெரிக்க அரச அதிகாரிகளும் திட்டவட்டமாக மறுத்து வருகின்றனர்.

உக்ரைன் போர் விவகாரத்தில் அமெரிக்க மற்றும் மேற்கத்திய நாடுகளுக்கும், ரஷ்யாவுக்கும் இடையே பெரும் பதற்றம் நிலவி வரும் சூழலில் இந்தக் கைது நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. பனிப்போர் காலத்துக்குப் பிறகு இத்தகைய குற்றச்சாட்டின் பேரில் அமெரிக்க செய்தியாளர் ஒருவர் ரஷ்யாவில் கைது செய்யப்பட்டுள்ளமை இதுவே முதல்முறையாகும். (04)

# மட்டக்களப்பு களுவாஞ்சிகுடி ஆதார வைத்தியசாலைக்கு திண்மக்கழிவு முகாமைத்துவ தேசிய, சர்வதேச விருதுகள்





(அஸ்ஹர் இப்றாஹிம்)

மட்டக்களப்பு மாவட்ட களுவாஞ்சிகுடி ஆதார வைத்திய சாலைக்கு 3R System திண்ம கழிவு முகாமைத்துவத்துக் கான தேசிய மற்றும் சர்வதேச விருதுகள் கிடைத்துள்ளன.

இலங்கையிலுள்ள வைத்தியசாலைகளுள் திண்மக் கழிவு முகாமைத்துவத்துக்காக கிடைத்த இரண்டாவது விருது இதுவாகும். முதல் விருது அம்பாறை பொது வைத்தி யசாலைக்கு கிடைத்திருந்தது.

இந்த விருதினை பெறுவதற்கு காரணகர்த்தாக்களாக விளங்கிய களுவாஞ்சிகுடி ஆதார வைத்தியசாலை வை-த்திய அத்தியட்சகர் டொக்டர். புவனேந்திரநாதன், டொக்டர் மயூரேசன், மட்டக்களப்பு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டொக்டர் ஜீ.சுகுணன், வைத்தியசாலை வைத் தியர்கள், வைத்தியசாலையின் உத்தியோகத்தர்கள், ஊழி யர்கள், தாதியர், வைத்தியசாலை நலன்புரிச் சங்க உறுப் பினர்கள் ஆகியோருக்கு பாராட்டுகள் கிடைத்துவருகின் றன.

## வன்னி ஹோப்பினால் 60 கண் வில்லைகள் திருமலை வைத்தியசாலைக்கு வழங்கல்



(ஹஸ்பர்)

அவுஸ்திரேலியாவை தலைமைய கமாகக் கொண்டு இலங்கையில் பணி புரியும் வன்னி ஹோப் நிறுவனத்தின் நிதி அனுசரணையில் திருகோணமலை பொது வைத்தியசாலைக்கு கண் சத்திர சிகிச்சை வில்லைகளின் ஒரு தொகுதி கள் இரண்டாம் கட்டமாக நேற்று (28) திருகோணமலை பொது வைத்தியசா லையில் வைத்து வழங்கி வைக்கப்பட் டன.

திருகோணமலை மாவட்ட பொது வைத்தியசாலையின் வேண்டுகோ ளுக்கு இணங்க கண் சத்திர சிகிச்சை நோயாளர்களின் நலன் கருதி குறித்த கண் வில்லைகள் (intraocular lens) வழங்கி வைக்கும் நிகழ்வில் வன்னி ஹோப் நிறுவனத்தின் இலங்கைக்கான பணிப் பாளர் எம்.ரீ.எம். பாரிஸினால் திருகோணமலை மாவட்ட பொது வைத்தியசாலையின் பணிப்பாளர் வைத்தியர் எல். டபிள்யு. ஜயவிக்ரமரத்னவிடம் கையளிக்கப்பட்டது.

தற்போது நாட்டில் நிலவி வரும் பொருளாதார நில மைகளைக் கருத்திற் கொண்டு திருகோணமலை மாவட்டத்தில் உள்ள கண் நோயாளர்கள் கண் சத்திரசிகிச்சையின் போது தேவையான கண் வில்லைகளை தாங்களாகவே கொண்டு வரும் நடை முறை இருந்து வந்தது.

குறித்த கண் வில்லைகளை கொள் வனவு செய்வதில் நோயாளர்கள் பல அசௌகரியங்களை எதிர்நோக்கி வந்த துடன் வைத்தியசாலை நிர்வாகமும் பல இடர்ப்பாடுகளையும் சந்தித்தது.

இந்த நிலமைகளை கருத்திற் கொண்டு அதிமுக்கியத்துவம் வாய்ந்த இந்த உதவியை வன்னி ஹோப் நிறுவனம் இரு தடவைகள் வழங்கியதையிட்டு திருமலை மாவட்ட பொது வைத்தியசாலை நிர்வாகம் வன்னி ஹோப் நிறுவனத்திற்கும் அதன் கொடையாளர்களுக்கும் நன்றியையும் பாராட்டையும் தெரிவித்துள்ளது.



## வருமானம் குறைந்த மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கிவைப்பு

(எம்.ஏ.றமீஸ்)

திருக்கோவில் கல்வி வலயத்திற்குட்பட்ட விநாயகபுரம் மண்டானை அரசினர் தமிழ் கலவன் பாடசாலையில் வருமானம் குறைந்த குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு அதிபர் டினேஸ்ராஜன் தலைமையில் இடம்பெற்றது.

சுவிஸ் உதயம் அமைப்பின் செயலாளர் அம்பலவாணர் ராஜனின் பிறந்த தினத் தையொட்டி மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கிவைக்கப்பட்டன.

இதன்போது சுவிஸ் உதயம் அமைப்பின் பொருளாளர் க.துரைநாயகம், செயலா ளர் அம்பலவாணர் ராஜன், உப பொருளாளர் பேரின்பராஜா, சுவிஸ் உதயத்தின் கிழக்கு மாகாண அமைப்பின் செயலாளர் ரொமிலா செங்கமலன், பொருளாளர் அக்கரை பாக்கியன் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

இதன்போது சுமார் 50 மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டன. அத்துடன் உப பொருளாளர் பேரின் பராஜாவின் சொந்த நிதியில் குறித்த பாடசாலையின் தேவைகளை நிவர்த்திசெய்யும் வகையில் ஒரு தொகை நிதியும் இதன்போது வழங்கிவைக்கப்பட்டமை குறிப் பிடத்தக்கது.




## பேலியகொடையில் மோதல் 11 பேர் பொலிசாரால் கைது

பேலியகொடையில் இரு குழுக்களுக்கிடையில் நீண்ட காலமாக நிலவி வந்த தகராறில் ஏற்பட்ட மோத லின் போது போதைப்பொருள் கடத்தலுக்கு உடந்தை யாக இருந்த 11 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

ஒழுங்கமைக்கப்பட்ட குற்றப் புலனாய்வுப் பிரிவின் அதிகாரிகளுக்குக் கிடைத்த இரகசியத் தகவலின் அடிப்படையில் கொழும்பு குற்றத்தடுப்புப் பிரிவினரால் இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்த நடவடிக்கையின் போது, நான்கு வாள்களை வைத்திருந்த 23-35 வயதுடைய எட்டு ஆண்களும், 26, 46 மற்றும் 47 வயதுடைய மூன்று பெண்களும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

தகவல்களின்படி, கைது செய்யப்பட்டவர்களில் 7 பேர் பல குற்றங்களுக்காக பொலிஸாரால் தேடப்பட்டு வந்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளில் சந்தேகநபர்கள் வெளிநாட்டில் மறைந்திருக்கும் வியா பாரி ஒருவரால் நடத்தப்படும் போதைப்பொருள் கடத் தலுடன் தொடர்புடையவர்கள் என்பதும் தெரியவந் துள்ளது.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை கொழும்பு குற்றத்தடுப்புப் பிரிவினர் முன்னெடுத்து வருகின்றனர். (த)

# நிந்தவூர் தக்வா கோஸ்வே வீதி வடிகான் முறையாக மூடாமையால் சிரமங்கள்

(அஸ்ஹர் இப்றாஹிம்)

நிந்தவூர் பிரதேச சபை பிரிவிற்குட்பட்ட உள்ளூர் வீதியான தக்வா கோஸ்வே வீதியின் ஓரமாக வெள்ள நீர் வடிந்தோடுவதற்காக அமைக்கப்பட்டுள்ள வடிகானின் மேலாக தொடர்ச்சியாக பாதுகாப்பு மூடி இடப்படாமையினால் இப்பாதையினை போக்குவரத்திற்கு பயன்படுத்துவோரும் பிரதேசவாசிகளும் பலவிதமான இன்னல்களுக்கு உள்ளாகி வருகின்றனர்.

இப்பாதை நிர்மாணப் பணிகள் இடம்பெற்றுக் கொண்டிருந்த வேளையில் இப்பிரதேச மக்கள் இவ்விடயம் சம்பந்தமாக அதிகாரிகளிடம் தெரிவித்திருந்த போதிலும் எந்தவிதமான நடவடிக்கைகளும் எடுக்கப்படாமை கவலையளிப்பதாக பிரதேசவாசிகள் கவலை தெரிவித்தனர். இரவு வேலையில் இப்பாதையை பயன்படுத்துவோர் மிகவும் அவதானமாக நடந்து கொள்ள வேண்டியுள்ளது. எனவே, இவ்விடயத்தில் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கவனமா செலுத்துமாறு பிரதேசவாசிகள் கேட்டுள்ளனர்.



## நைஜரினூடாக ஐரோப்பாவுக்கு அகதிகள் பயணம் தடைசெய்யும் சட்டத்தை ராணுவ அரசு நீக்கியது!

ஐரோப்பிய நாடுகளில் குடியேற விரும்பும் அகதிகள் தங்கள் நாடு வழியாக பயணப்படுவதைத் தடை செய்யும் சட்டத்தை, மேற்கு ஆபிரிக்க நாடான நைஜரின் ராணுவ அரசு திரும்பப் பெற்றுள்ளது.

இது குறித்து ராணுவ ஆட்சியாளர் அப்துரஹ்மேன் சியானி கையெழுத்திட்டுள்ள அரசாணையில், 'அகதிகள் தொடர்பாக கடந்த 2015 ஆம் ஆண்டில் இயற்றப்பட்ட சட்டம் திரும்பப் பெறப்படுகிறது.

அந்தச் சட்டத்தின் கீழ் குற்றவாளியாக அறிவிக்கப்பட்டவர்கள் அந்தக் குற்றச்சாட்டுகளில் இருந்து விடுவிக்கப்படுகிறார்கள். அவர்களுக்கு விதிக்கப்பட்ட தண்டனைகள் ரத்தாகின்றன, என்று அந்த அரசாணையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

பிரான்ஸ் கொலனி ஆதிக்கத்திலிருந்து கடந்த 1960 ஆம் ஆண்டு விடுதலை பெற்ற நைஜரில் கடந்த 2020 ஆம் ஆண்டு நடைபெற்ற அதிபர் தேர்தலில் முகமட் பசும் வெற்றி பெற்று ஆட்சியமைத்தார். அந்த நாட்டில் அமைதியான முறையில் நடைபெற்ற முதல் ஆட்சி மாற்றம் இதுவாகும்.

எனினும், பசுமின் ஆட்சியை கடந்த ஜூலை மாதம் கவிழ்த்த ராணுவம், அதிகாரத்தைக் கைப்பற்றியது. இதற்கு, ஐக்கிய நாடுகள் சபை, ஐரோப்பிய ஒன்றியம், ஆபிரிக்க ஒன்றியம் உள்ளிட்ட அமைப்புகள் கண்டனம் தெரிவித்து வருகின்றன.

இந்த விவகாரத்தில் ஐரோப்பிய ஒன்றியத்துக்கும், நைஜருக்கும் இடையிலான தூதரக உறவில் பதற்றம் நீடித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (04)

## காஸாவில் மோதல் நிறுத்தம் நீடிக்கும் வாய்ப்பு இஸ்ரேல் - ஹமாஸ் தரப்புகளிலிருந்து தகவல்!

காஸாவில் நீடிக்கப்பட்ட போர் நிறுத்தத்தை இஸ்ரேல்-ஹமாஸ் ஆகிய இரு தரப்பினருமே நேற்றும் கடைப்பிடித்த நிலையில், இந்த மோதல் நிறுத்தம் மேலும் நீடிக்கப்படலாம் என்று இரு தரப்பிலும் நம்பிக்கை தெரிவிக்கப்பட்டது.

இது குறித்து ஹமாஸ் அமைப்பின் அதிகாரி கலீல் அல்-ஹய்யா தகவல் வழங்கியபோது,

காஸாவில் தற்போது கடைபிடிக்கப்பட்டு வரும் மோதல் நிறுத்தம், கூடுதலாக 2 நாட்களுக்கு நீடிக்கப்படும் என்று நம்புகிறோம். இஸ்ரேலுடன் ஏற்கெனவே மேற்கொண்டுள்ள போர் நிறுத்த ஒப்பந்தத்துக்குப் பதிலாக, புதிய ஒப்பந்தம் ஒன்றை ஏற்படுத்திக்கொள்ள விரும்புகிறோம்.

தற்போதைய ஒப்பந்தத்தில் இஸ்ரேல் சிறையில் உள்ள பெண்கள், குழந்தைகள், சிறார்களை மட்டுமே விடுதலை செய்ய ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளது. அந்த வரையறையை விரிவுபடுத்தும் வகையில் இஸ்ரேலுடன் புதிய ஒப்பந்தத்தை மேற்கொள்ள விரும்புகிறோம், என்றார் அவர்.

இது குறித்து இஸ்ரேல் பாதுகாப்பு அமைச்சரவையைச் சேர்ந்த கிடியோன் சார் என்பவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், 'இஸ்ரேலும், ஹமாஸூம் ஏற்கெனவே மேற்கொண்ட ஒப்பந்தத்தின் ஒரு பகுதியாகத்தான் போர் நிறுத்தம் மேலும் 2 நாட்களுக்கு நீடிக்கப்பட்டுள்ளது.

இந்தச் சண்டை நிறுத்தத்தை மேலும் நீட்டிக்கவும் இஸ்ரேல் தயாராக இருக்கிறது. இருந்தாலும், பிணைக்கைதிகள் விடுவிக்கும் பணிகள் நிறைவடைந்ததும் காஸாவில் தாக்குதல் நடவடிக்கையை இஸ்ரேல் மீண்டும் தொடங்கும், என்றார்.

இதற்கிடையே, ஹமாஸ் அமைப்பினர் கூடுதல் பிணைக் கைதிகளை விடுவிப்பதை அடிப்படையாகக் கொண்டு காஸாவில் தற்போதைய சண்டை நிறுத்தத்தை மேலும் நீட்டிப்பதற்கான முயற்சிகளை தாங்கள் மேற்கொண்டு வருவதாக கட்டார் வெளியுறவுத் துறை அமைச்சகம் நேற்றுத் தெரிவித்தது. கட்டார் முன்னிலையில் கடந்த 22 ஆம் திகதி மேற்கொள்ளப்பட்ட ஒப்பந்தத்தின் அடிப்படையில் தங்களால் பிணைக் கைதிகளாகக் கடத்திச் செல்லப்பட்ட 50 பெண்கள், குழைந்தைகளை ஹமாஸ் அமைப்பினர் விடுவித்தனர். அதற்குப் பதிலாக, இஸ்ரேல் சிறைகளில் அடைக்கப்பட்டிருந்த 150 பாலஸ்தீன கைதிகள் விடுவிக்கப்பட்டனர். அவர் அனைவரும் பெண்கள் மற்றும் சிறார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. (04)






# கற்பிட்டி கல்வி வளர்ச்சிக்காக கல்வி அபிவிருத்தி ஒன்றியம்

(கற்பிட்டி - எம்.எச்.எம் சியாஜ்)

கற்பிட்டி நகரம் கல்வியில் பல சாதனைகளை நிலைநாட்டிய வரலாறுகள் உண்டு. ஆரம்ப காலத்தில் கற்பிட்டி நகர பாடசாலையில் வெளி ஊர் மாணவர்கள் பாடசாலை விடுதிகளிலும் உறவீனர்களின் வீடுகளிலும் தங்கி கல்வி கற்று சிறந்த அடைவு மட்டங்களை ஈட்டிய வரலாற்று சான்றுகள் இன்றும் காணப்படுகின்றன.

இவ்வாறு காணப்பட்ட கற்பிட்டியின் கல்விப் பாதை கற்பிட்டி பாடசாலையில் கடமையாற்றிய ஒரு சில கல்வி அதிகாரிகளின் சுயநலப்போக்கின் காரணமாக கடந்த ஒரு தசாப்த காலமாக வீழ்ச்சி பாதையை நோக்கிய நகர்வுடன் கற்பிட்டி மாணவர்கள் வெளி ஊர் மற்றும் வெளி மாவட்ட பாடசாலைகளுக்கு சென்று கல்வி கற்கும் நிலை இன்று தோன்றி உள்ளது.

இந்நிலையை மாற்றி அமைத்து கற்பிட்டியின் கல்வி அபிவிருத்தியை உருவாக்கும் எண்ணக் கருவின் அடிப்படையில் கற்பிட்டி கல்வி அபிவிருத்தி ஒன்றியம் உருவிக்கப்பட்டுள்ளது, என்று அதற்கான நிகழ்வில் தெரிவிக்கப்பட்டது.

இதில் கற்பிட்டியில் துறைசார்ந்த கல்வியலாளர்கள், அனைத்துக் கட்சி அரசியல் பிரமுகர்கள், உலமாக்கள், மஸ்ஜிதுகளின் தலைவர்கள், சமூக ஆர்வலர்கள், சங்கங்களின் தலைவர்கள் என சகல தரப்பினர்களையும் உள்ளடக்கியதாக கற்பிட்டி கல்வி அபிவிருத்தி ஒன்றியம் உருவாக்கப்பட்டுள்ளது.

இவ்வொன்றியம் கற்பிட்டியின் கல்வி மேம்பாட்டிற்கு தேவையான நேரத்தில் பொருத்தமான சேவைகளையும் ஆலோசனைகளையும் வழுங்குவதுடன் பாடசாலை நிர்வாகத்தோடு இணைந்து மாணவர்களின் ஒழுக்க விழுமியங்கள் பாடசாலையில் ஆசியர்கள் கற்பித்தல் நடவடிக்கைகளின் போது எதிர்நோக்கும் சவால்களை பாடசாலை நிர்வாகத்தோடும் பாடசாலை அபிவிருத்தி சங்கத்தோடும் இணைந்து பாடசாலையினுடைய கல்வி முன்னேற்றத்திற்காக பாடசாலைக்கு வெளியில் ஊர் மயப்படுத்தப்பட்ட அமைப்பாக மேற்படி ஒன்றியம் காணப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டதுடன் ஒன்றியத்திற்கான செயற்குழுவும் தெரிவு செய்யப்பட்டது.

தலைவராக ஓய்வு பெற்ற புத்தளம் வளையக் கல்விப் பணிமனையின் உதவிக் கல்விப் பணிப்பாளர் எஸ்.டி.எம் பைறுஸமான், பிரதித் தலைவராக அதிபர் எம்.ஐ.எம் றஸ்ஸாக், செயலாளராக உதவித் திட்டமிடல் பணிப்பாளர் எம்.என்.எம்.எம் பஹ்றி, இணைச் செயலாளராக பட்டதாரி எஸ்.எம் அஸ்லம்,

பொருளாளராக முன்னால் போரூட் நிறுவனத்தின் மாவட்ட இணைப்பாளர் டி.எல்.எம்.மகீன் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.68, குறசெட் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 29.11.2023இல் வெளியிடப்பெற்றது.